முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இனிய எளிய தமிழில் எழுதியுள்ள

# "ததும்பும் தமிழ்ப் பெருமிதம்" எனும் நூல்!

## நிதித்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு வெளியிட்டார்!

சென்னை, பிப். 20-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் படைத்துள்ள "ததும்பும் தமிழ்ப் பெருமிதம்" எனும் நூலை இன்று (20.2.2026) தலைமைச் செயலகத்தில், நிதி, சுற்றுச்சூழல் மற்றும் கால நிலை மாற்றத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு அவர்கள் வெளியிட, முதலமைச்சர் அவர்கள் பெற்றுக்கொண்டார்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 2021 மே திங்களில் ஆட்சிப் பொறுப்பேற்ற போது, "இது ஒரு கட்சி அரசு அல்ல; ஓர் இனத்தின் அரசு" என்று குறிப்பிட்டார்கள். அதன்படியே, தமிழ் இனத்தின் பெருமைகள் கூறும் மிகச் சிறந்த அரசாக ஐந்து ஆண்டுகளாகச் செயல்பட்டு வந்துள்ளது இந்த அரசு"

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள்

தமிழ் மொழியின் - தமிழ்ப் பண்பாட்டின் தனித் தன்மைகள் எல்லாம் மிளிரும் வகையில் உரிய ஆதாரங்களுடன் தமிழ் மக்களும் மற்றவர்களும் அறிந்து உணர்ந்து மகிழ்ந்து பெருமிதம் கொள்ளும் வகையில் இனிய தமிழில் எளிய நடையில் எழுதியுள்ளார்கள்.

இந்த நூலைப் படிக்கும் ஒவ்வொருவருக்கும்

கீழடி, பொருநை ஆகிய இடங்களில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வுகளில் கண்டெடுக்கப்பட்டுள்ள தொன்மைச் சிறப்புகள் வாய்ந்த பொருள்களை நேர்த்தியாகக் காட்சிப்படுத்தியுள்ள அருங்காட்சியகங்களைக் காண்பது போன்ற உணர்வுகளை ஏற்படுத்தும். இந்திய அளவில் மட்டுமல்ல, உலக அளவிலும் தாதுப் பொருள்களில் இருந்து இரும்பைப் பிரித்து எடுக்கும் தொழில்நுட்பம் தமிழ் நிலப்பரப்பில் இருந்தே 5000 ஆண்டுகளுக்குமுன் தோன்றியுள்ளது என்பது கீழடி, பொருநை அகழாய்வுகள் மூலம் உலகுக்கு வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது.

இவற்றைத் தொடர்ந்து மேலும் பல்வேறு இடங்களில் நடைபெற்றுவரும் அகழாய்வுகளின் துணைகொண்டு தஞ்சாவூரில் மாபெரும் சோழர் அருங்காட்சியகம், ஈரோடு மாவட்டத்தில் நொய்யல் அருங்காட்சியகம், இராமநாதபுரம் மாவட்டத்தில் நாவாய் அருங்காட்சியகம், சென்னை, எழும்பூரில் உள்ள அரசு அருங்காட்சியகத்தில் ஒரு புதிய வெண்கல அருங்காட்சியகம் எனப் பல அருங்காட்சியகங்கள் 285 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படவிருக்கின்றன.

இத்தகைய சிறப்புகளுடன் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் குமரி முனையில் உள்ள அய்யன் திருவள்ளுவர் பேரறிவுச் சிலையையும், விவேகானந்தர் பாறையையும் இணைக்கும் வகையில் 37 கோடி ரூபாய் செலவில் கடல் மீது கண்ணாடி இழைப்பாலம் ஒன்றைக் கட்டித் திறந்து வைத்துள்ளார்.

தமிழ்ப்பண்பாட்டின் வேர்களைத் தேடும் பணிகளில் ஒன்றாக ஆண்டுதோறும் ஜனவரித் திங்கள் 11 மற்றும் 12 ஆம் நாள்களில் அயலகத் தமிழர்கள் தினம் கொண்டாடி வெளிநாட்டுத் தமிழர்களிடம் தாய்த் தமிழ்நாட்டு உணர்வை வளர்க்கிறார்கள். தமிழ்ப் பெருமை கூறும் நூல்கள் பல அயல்நாட்டு மொழிகளில் வெளியிடப்படுகின்றன. இவற்றை ஊக்கப்படுத்தும் வகையில் ஆண்டுதோறும் பன்னாட்டுப் புத்தகக் கண்காட்சிகளும் நடத்தப்படுகின்றன.

சிந்துவெளி நாகரிகம் திராவிட நாகரிகம் என முதன்முதலில் ஆய்ந்து அறிவித்து உலகின் கவனத்தை ஈர்த்த ஜான் மார்ஷல் அவர்களின் நூற்றாண்டு விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டு, அவரது திருவுருவச்சிலை திறந்து வைக்கப்பட்டது.

முதலமைச்சர் அவர்கள், தமிழ் மொழியின் பெருமைகளை உலகுக்குப் பறைசாற்றும் பல்வேறு ஆதாரங்களின் அடிப்படையில் "இந்தியத் துணைக் கண்டத்தின் வரலாறு, இனி, தமிழ் நிலப்பரப்பில் இருந்துதான் எழுதப்படவேண்டும்" என்று பேரவையிலும், வேறு பல்வேறு நிகழ்வுகளிலும் எடுத்துரைத்து, ஒன்றிய அரசையும் வலியுறுத்தி வருகிறார்கள்.

அருமைத் தமிழ் மொழியின் செழுமைகளையும் சிறப்புகளையும் அவ்வப்போது வலியுறுத்தி, பல்வேறு நிகழ்வுகளில்தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றியுள்ள பேருரைகள் தொகுக்கப்பட்டு, "ததும்பும் தமிழ்ப் பெருமிதம்" எனும் பெயரில் அழகிய வடிவில் பல்வேறு வண்ணங்களில் நூலாக உருவாக்கப்பட்டுள்ளது. இந்நூலில் தொல்லியல் பொருட்களைக் காட்சிப்படுத்தியுள்ள அருங்காட்சியகங்கள், புதுப்பிக்கப்பட்ட வள்ளுவர் கோட்டம், குமரிமுனையில் பேரறிவுச் சிலையுடன் கண்ணாடி இழைப்பாலம், வெளியிடப்பட்டுள்ள தமிழ்நூல்கள் முதலான பல்வேறு செய்திகளுடன் வண்ணப்படங்களும் இடம்பெற்றுள்ளன. இந்நூலில், தமிழுக்கான அரசாணைகள் இடம்பெற்றுள்ளன. மேலும், அரசு விழாக்கள் மற்றும் பொது நிகழ்ச்சிகளில் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடப்படுவதை நெறிப்படுத்தும் அரசாணை போன்ற முக்கியமான அரசாணைகள் இடம்பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

மேலும், தமிழறிஞர்களுக்கு தமிழ்நாடு அரசால் செய்யப்பட்ட சிறப்புகள், வழங்கப்பட்ட விருதுகள் மற்றும் சிறந்த நூல்களுக்கான பரிசுகள் வழங்கியது குறித்தும் இந்நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது சிறப்பம்சமாகும். இவற்றைக் காண்பவர்கள் உள்ளத்தில் இந்நூலைப் படிக்க வேண்டும்; தமிழ்ப் பண்பாட்டுக் களங்களை நேரில் சென்று காணவேண்டும் என்னும் உணர்வுகளை ஏற்படுத்தும்.

உலகின் தொன்மையான தன்னிகரற்ற - தனித்தன்மையான நம் தாய்த்தமிழ் மொழியின் பெருமைகள் அனைத்தையும் உணர்த்தும் வண்ணம் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் படைத்துள்ள "ததும்பும் தமிழ்ப் பெருமிதம்" என்னும் சிறப்பு வாய்ந்த நூல் இன்றையதினம் வெளியிடப்பட்டது.

இந்நிகழ்வின்போது, சட்டப்பேரவைத் தலைவர் மு. அப்பாவு, தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், சட்டப் பேரவை துணைத் தலைவர் கு. பிச்சாண்டி, அரசு தலைமை கொறடா கா.ராமச்சந்திரன், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் வே. ராஜாராமன், சட்டப்பேரவை முதன்மைச் செயலாளர் முனைவர் கி. சீனிவாசன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

# சென்னை கிழக்கு மாவட்டக் கழக நிர்வாகிகள் - பகுதிக் கழகச் செயலாளர்கள் - வட்டக் கழகச் செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர்- அமைச்சர் பி.கே.சேகர்பாபு அறிவிப்பு!



சென்னை கிழக்கு மாவட்டக் கழக நிர்வாகிகள், பகுதிக் கழகச் செயலாளர்கள், வட்டக் கழகச் செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம் இன்று (21.02.2026 - சனிக்கிழமை) மாலை 7.00 மணியளவில், சென்னை, ஏழு கிணறு தெருவில் உள்ள குளோப் திருமண மண்டபத்தில் அவைத் தலைவர் கோ.ஏகப்பன் தலைமையில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் சென்னை கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட மாநில நிர்வாகிகள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், இந்நாள் - முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், மாவட்டக் கழக நிர்வாகிகள், தொகுதிப் பார்வையாளர்கள், பகுதிக் கழகச் செயலாளர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், மண்டலக் குழுத் தலைவர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், வட்டக் கழகச் செயலாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: கழக ஆக்கப் பணிகள்.

**அமைச்சர் பி.கே.சேகர்பாபு**
செயலாளர், சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க.

# தி.மு.க. கலை, இலக்கியப் பகுத்தறிவுப் பேரவை மாநில நிர்வாகிகள் கலந்தாலோசனைக் கூட்டம்!

## கலை, இலக்கியப் பகுத்தறிவுப் பேரவைத் தலைவர் வாகை சந்திரசேகர் அறிவிப்பு!

தி.மு.க. கலை, இலக்கியப் பகுத்தறிவுப் பேரவை மாநில நிர்வாகிகள் கலந்தாலோசனைக் கூட்டம், 23.2.2026 திங்கட்கிழமை காலை 10.30 மணியளவில், எனது தலைமையில், துணைத் தலைவர்கள் போஸ்வெங்கட், எம்.ஆர்.ஆர்.வாசுவிக்ரம், செயலாளர்கள் மா. உமாபதி, இறையன்பன் குத்தூஸ், வண்ணை அரங்கநாதன், என்.தில்லைசெல்வம் துணைச் செயலாளர்கள் கவிஞர் நன்மாறன், எழில்மாறன் செல்வேந்திரன், மீனா ஜெயக்குமார், சி.கோபி, ஜாகிர் உசேன், எம்.எஸ்.ஹரிபாபு, என்.எஸ்.மாதேஷ்வரன் ஆகியோர் முன்னிலையில் நடைபெறும்.

**பொருள்** : முதலமைச்சர் - கழகத் தலைவர் அவர்களின் பிறந்தநாள் கழக ஆக்கப் பணிகள் குறித்து

**"அண்ணா அறிவாலயம்"**
**சென்னை18.**
**நாள்: 20.02.2026.**

**வாகை சந்திரசேகர்**
**தலைவர்,**
**கலை, இலக்கியப் பகுத்தறிவுப் பேரவை.**

தாம்பரம் மாநகராட்சியில் அமைந்துள்ள

# மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைக்கு எம்.ஆர்.ஐ. ஸ்கேன் வசதி!

## சட்டமன்றத்தில் எஸ்.ஆர்.ராஜா கோரிக்கை!

**தாம்பரம், பிப்.21-**

**தமிழ்நாடு சட்டமன்றத்தின் கேள்வி நேரத்தின்போது தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர். ராஜா பேசுகையில்**



தாம்பரம் தொகுதியில் மாவட்ட மருத்துவமனை 115 கோடி மதிப்பீட்டில் பிரம் மாண்டமாக கட்டப்பட்டு தமிழக முதல்வர் திறந்து வைத்து, அமைச்சர் அவர்கள் திறந்து வைத்து தாம்பரத்திற்கு பெருமை சேர்த்த முதல்வர் அவர்களுக்கு மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

நேற்றைய தினம் 180 படுக்கைகள் கொண்ட புற்றுநோய் மருத்துவமனையை 30 கோடி செலவில் நேற்று திறந்து வைத்த அமைச்சர் அவர்களுக்கும் தமிழக முதலமைச்சருக்கும் தொகுதி மக்களின் சார்பாக மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

அந்த மாவட்ட மருத்துவமனை என்பது தாம்பரம் தொகுதி, பல்லாவரம் தொகுதி சுற்றுப்புற கிராமத்தில் இருப்பவர்கள் ஒரு நாளைக்கு 2500 புற நோயாளிகளும், 250 உள் நோயாளிகளும் வந்து செல்கிறார்கள்.

இன்னும் போதுமான மருத்துவர்கள் தேவைப்படுகிறது, செவிலியர்கள் தேவைப்படுகிறது, கூடுதலாக எம்.ஆர்.ஐ. ஸ்கேன் ஒன்று மிக மிக அவசரமாக தேவைப்படுகிறது, அமை ச்சர் அவர்கள் இந்த அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்து அந்தப் பகுதி மக்களுடைய வாழ்வாதாரத்தை உயர்த்துவாரா என கேள்வி எழுப்பினார்.

**அமைச்சர் மா.சுப்பிரமணியன் பேசுகையில் :**

வட்டார மருத்துவமனையை தமிழக முதலமைச்சர் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையாக தரம் உயர்த்தி 115 கோடியில் ஒரு பிரம்மாண்ட கட்டிடத்தை முதல்வரே நேரில் வந்து திறந்து வைத்து இன்றைய தினம் தூரம் 2500 புற பயனாளர்கள் பயன்பெறுகிற மருத்துவமனையாக இயங்கி வருகிறது.

இந்நிலையில் நேற்றைக்கு கூட 30 கோடியே 16 லட்சம் மதிப்பீட்டில் இந்தியாவில் முதல் முறையாக புற்றுநோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஒரு ஆதரவு சிகிச்சை மையம் ஒன்று திறந்து வைக்கப்பட்டிருக்கிறது.

புற்றுநோய் இறுதி சிகிச்சைக்கான அந்த ஆய்வு மையம் என்பது இந்தியாவில் முதல்முறையாக தாம்பரம் பகுதியில் அந்த மாவட்ட அரசு மருத்துவமனையை ஒட்டி திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இப்படி பல்வேறு வசதிகள் தாம்பரத்திற்குஇந்த குறுகிய கால இடைவெளியிலேயே 145 கோடி மதிப்பிலான திட்டங்கள் அங்கு செயல்படுத்தப்பட்டு இருக்கிறது.

மன்ற உறுப்பினர் கூறியிருப்பதைப் போல எம்ஆர்ஐ ஒன்று வேண்டும் என கேட்டிருக்கிறார், நிச்சயம் அதை அமைத்து தருவதற்கான முயற்சி எடுக்கப்படும்.

மருத்துவர்கள், செவிலியர்கள் பற்றி சொல்லியிருக்கிறார் அந்த மருத்துவமனையை பொறுத்தவரை சாங்ஷன் ஸ்ட்ரென்த் என்னவோ அதற்குரிய மருத்துவர்களும், செவிலியர்களும் இருக்கிறார்கள், ஒரு காலி பணியிடம் கூட இல்லை என தெரிவித்தார்.






தமிழக அரசின் "நான் முதல்வன் திட்டத்தின் கீழ் , குறிப்பாக கிராமப்புற பகுதியிலிருந்து வந்து கல்விப்பயிலும் சிறந்த மாணவச் செல்வங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, பஹ்ரைன் நாட்டுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கும் 20 மாணவ மாணவிகளை வரவேற்று , கலந்துரையாடல் நடத்தி , அவர்களுக்கு வழிகாட்டுதல் வழங்கும் நிகழ்வு விருந்தோம்பலுடன் பாரதி தமிழ் சங்க அலுவலக அரங்கில் தமிழ்நாடு அரசு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் இணை துணைத்தலைவர் சோம ராஜேஸ்வரன் மற்றும் அதன் ஆலோசகர் ஷாநவாஸ் கான் தமிழக அரசின் பிரதிநிதிகளாக பஹ்ரைன் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர். இந்நிகழ்வில் பஹ்ரைன் அல் அஹ்லியா பல்கலைக் கழகத்தின் சார்பில் கௌரி சங்கர் கலந்துக் கொண்டார். வரவேற்புரை சங்க செயலாளர் கவிஞர் நாகூர் அப்துல் கையூம் வழங்கினார். பாரதி தமிழ் சங்கத் தலைவர் வல்லம் பசீர் தலைமையுரை ஆற்றினார். ரமேஷ் ரெங்கநாதனுக்கு கேடயம் மற்றும் பாராட்டுப் பத்திரம் வழங்கி ஒருங்கிணைப்பாளர் முத்துவேல் கௌரவித்தார். கலை பண்பாட்டு செயலாளர் ஹன்சுல் கனி நன்றியுரை வழங்கினார். ரதி நிகழ்ச்சியை தொகுத்தளித்தார்.



தாம்பரம் மாநகர வர்த்தக அணியின் துணை அமைப்பாளரும்,முன்னாள் நகர துணை செயலாளர், இரா.செல்வகுமாரின் தாயாரும், மாநகர தொழிலாளர் அணியின் துணை அமைப்பாளர் எஸ்.மகேஷ் மற்றும் பொருங்களதூர் வடக்கு பகுதி தகவல் தொழில்நுட்ப ஒருங்கிணைப்பாளருமான எஸ் செல்வபிரகாஷ் ஆகியோரின் பாட்டியுமான நினைவில் வாழும் கே.எஸ்.தனம்மாள் ராமையா அவர்களின் முதலாம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு அவரது திருவுருவ படத்திற்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது. மேலும் துணை மேயர் கோ.காமராஜ், எஸ்.இந்திரன், மருத்துவ முகாம், தூய்மை பணியாளர்களுக்கு அறுசுவை உணவு வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் டி.ஆர்.கோபி, ஜா.ரவிகுமார், ரமணிஆதிமூலம், எஸ்.ஜி.கருணாகர பாண்டியன், ஜா.ரவிக்குமார் மா.கன்னியப்பன், கோ.ராஜேந்திரன், பி.வி.ஏகாம்பரம்,டி.ஆர்.முரளி, பி.காளியப்பன், க.முனுசாமி, நந்தம்பாக்கம் பாலா,அரசு, ஆர்.அகஸ்டின், திவாகர், எம்.நாகராஜ், சாகுல், தட்சணாமூர்த்தி, மாநகர, பகுதி மற்றும் வட்ட கழக நிர்வாகிகளும் நண்பர்களும் உறவினர்களும் கலந்து கொண்டு அன்னாருக்கு முதலாவது ஆண்டு நினைவு நாள் தினம் அனுசரிக்கப்பட்டது.

# 22ஆம் ஆண்டு நினைவு நாள்



திருமதி
**தமிழரசி ஜெயராமன்**
நினைவு நாள் : **21.02.2026**

**எங்கள் குடும்பத்தின் குலவிளக்கே**
**எங்களது இதயத்தில் நிலைத்து நிற்கும்**
**உன்னை எண்ணி எங்களது கண்ணீர் அஞ்சலியை**
**காணிக்கையாக்குகிறோம்.**

★★★

**தந்தை** - நினைவில் வாழும் **கோ.சி.மணி** முன்னாள் அமைச்சர்
**தாய்** - நினைவில் வாழும் **கோ.சி.கிருஷ்ணவேணி மணி**
**கணவர் - தி.ஜெயராமன்**
**மகன்** : டாக்டர் **ஜெ.குமணன்** M.D.,D.M (Oncology)
**மருமகள்** : டாக்டர் **கே.கண்மணி**
**பேரன் : நிலன் குமணன்** **பேத்தி : நிலா தமிழரசி**
மற்றும் குடும்பத்தினர் – ஆடுதுறை – தஞ்சை மாவட்டம்

திருப்பூர் வடக்கு மாவட்டக் கழகப் பொருளாளர்

# சு.சாமிநாதன் மறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, பிப். 21-

திருப்பூர் வடக்கு மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தின் மூத்த முன்னோடியும் கழகத்தில் பல்வேறு பொறுப்புகள் வகித்து திறம்பட கழகப் பணியாற்றி வந்தவரும், தற்போதைய திருப்பூர் வடக்கு மாவட்டக் கழகப் பொருளாளருமான நம்பியாம்பாளையம் சு.சாமிநாதன் அவர்கள் நேற்று அதிகாலை 1மணி அளவில் இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

நம்பியாம்பாளையம் சு.சாமிநாதன் மறைவுச் செய்தி அறிந்த முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது ஆழ்ந்த இரங்கலை அன்னாரது குடும்பத்தினருக்குத் தெரிவித்துள்ளார்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாள்

# தருமபுரியில் விளையாட்டு போட்டி!

தருமபுரி, பிப்.21-

தருமபுரி மேற்கு மாவட்டம் பையர்நத்தம் கிராமத்தில் முதலமைச்சர்,கழக தலைவர் அவர்களின் 73 வது பிறந்த நாளை முன்னிட்டு பாப்பிரெட்டிப்பட்டி ஒன்றிய செயலாளர் பி.எஸ்.சரவணன் ஏற்பாட்டில் நடைபெற்ற இளைஞர்களுக்கான மாபெரும் கைப்பந்து போட்டியில் வெற்றி பெற்ற அணிகளுக்கு ரொக்க பரிசினை தருமபுரி மேற்கு மாவட்ட கழக செயலாளர், முன்னாள் அமைச்சர் முனைவர் பெ.பழனியப்பன் வழங்கினார்.

உடன் ஒன்றிய வர்த்தக அணி துணை அமைப்பாளர் மு.செந்தூரன், கண்ணன், குப்புசாமி,கிளை செயலாளர்கள் விஜயன், வெங்க டேசன்,சங்கர், பூக்கடை வெங்கடேசன்,செல்வம், ஒன்றிய நிர்வாகிகள் ஜாகிதா ஷெரீப், வெங்கடேசன், உதயசூரியன், இரணியன், செந்தில், மாதேஷ் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## திண்டிவனம் கோ.வெங்கட்ராமன்

**பிப்ரவரி 21 (2013)**



**1974ஆம் ஆண்டு முதல் கழக வழக்கறிஞராக பணியாற்றி வந்தார்.**

**1989–ல் மாநிலங்களவை உறுப்பினராகவும் – 1996–ல் திண்டிவனம் மக்களவை தொகுதியில் கழகத்தின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்று, மத்திய அமைச்சராகப் பணியாற்றினார்.**

**பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த இவர் கழகம் அறிவித்த பல்வேறு போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.**

**இந்தி எதிர்ப்பு போராட்டம், சட்ட எரிப்பு போராட்டம் போன்ற போராட்டங்களில் பங்கேற்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**